16th March 1966]

விட்டார்களா என்று கேட்க விரும்புகிறேன். ப்ரைமரி ஹெல்த் செண்டர்களுக்கு டி.எம். அன்ட் எஸ்., ஜி.ஸி.ஐ.எம். படித்துவிட்டு இருக்கக்கூடிய டாக்டர்களைப் போட்டு விட்டு, அனுபவம் உள்ளவர்களை டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்ட்டர்ஸில் போட்டால் அங்கு ஆப்பரேஷன் முதலியன செய்ய வேண்டியிருப்பதால் வசதியாக இருக்கும்; ஆகவே, இதைச் சிந்திப்பார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் அங்கத்தினர் அவர்கள் என்னுடைய பதிலைத் தவருகப் புரிந்து கொண்டிருக்கிருர்கள். எக்ஸ்பீரியன்ஸ்ட் டாக்டர்ஸ் என்று கூறும்போது, இரண்டு ஆண்டுகள் டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்ட்டஸில் பணிபுரிந்தவர்களை மாற்றியிருப்பதைத் தான் சொன்னேன். ஜில்லா மருத்துவமனையில் போஸ்ட் கிராஜுவேட் படித்துள்ள சர்ஜன்கள், ஃபிஸிஷன்கள் எல்லாம் இருக்கிருர்கள். டிஸ்ட்ரிக் ஹெட்க்வார்ட்டர்ஸ் மருத்துவ மனையில் வருகிறவர்களுக்கு எந்த விதத்திலும் மருத்துவ வசதி குறைந்து விடாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அரசாங்க மருத்துவ மனைகள்

* 307. கேள்வி.—திரு. எல். ஆனந்தன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தாலுகா தலைமை ஆஸ்பத்திரியில் (X-ray) வசதி ஏற்படுத்தும் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: எக்ஸ்ரே கச்சா பிலிம்களைப் பெறுவதில் உள்ள இடர்பாட்டினுல் கள்ளக் குறிச்சியில் உள்ள அரசாங்க மருத்துவமனைக்கு எக்ஸ்ரே இயந்திரங்கள் வாங்கும் திட்டம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. 1967-68-ம் ஆண்டில் இது ஆலோசிக்கப்படும்.

* 308. கேள்வி—திரு. ஆ. தங்கவேலு: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்ட பழைய தலைமை மருத்துவ மனைக்கு 1965 ஜனவரி முதல் டிசம்பர் முடிய பிரசவத்திற்கு வந்த பெண்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களுள் உயிர் இழந்தவர்கள் எத்தனை பேர் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்று ஐந்து.

(இ) ஏழு.

திரு. ஆ. தங்கவேலு: தலைவர் அவர்களே, அந்த மருத்துவ மனையில் பிரசவத்திற்கு வருகிற பெண்கள் சரியான முறையில் கவனிக்கப்படாததால் உயிர்ச் சேதம் ஏற்படுகிறது என்பதைக் குறித்து ராமநாதபுரத்திலிருந்து புகார் வந்திருக்கிறதா ? இங்கே